©

தமிழ்நாடு அரசு 2021 கையெழுத்துத் தொடர்

## பொது (பல்வகை)த் துறை

**அரசாணை (நிலை) எண்.935, நாள் 02.11.2021**

**பிலவ, ஐப்பசி – 16 திருவள்ளுவர் ஆண்டு 2052**

விடுமுறை நாட்கள் – 1881–ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் கீழ் மாநில அரசு அலுவலகங்களுக்கும் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு வங்கிகள் உட்பட அனைத்து வணிக வங்கிகளுக்கும் 2022–ஆம் ஆண்டிற்கான பொது விடுமுறை நாட்கள் அறிவித்து – ஆணை வெளியிடப்படுகின்றது.

**படிக்கவும்:**

1. அரசாணை (நிலை) எண்.554, பொது (பல்வகை)த் துறை, நாள்: 27.10.2020.

2. இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடித எண். CHN.HRMD C4D. No.S527/04.01.001 /2021-2022, நாள்: .08.07.2021.

*****

**ஆணை:**

2022–ஆம் ஆண்டிற்கான பொது விடுமுறை நாட்கள் தொடர்பாக பின்வரும் ஆணையினை தமிழ்நாடு அரசு வெளியிடுகிறது:–

(i) **பொது விடுமுறை நாட்கள்:** இந்த ஆணையில் இணைக்கப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட விடுமுறை நாட்கள், 1881–ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் XXVI/1881) கீழ் அறிவிக்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும்.

(ii) **அரசு விடுமுறை நாட்கள்:** தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அனைத்து அலுவலகங்களும், பின்வரும் நாட்களில் மூடப்படவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது:–

அ) இந்த ஆணையில் இணைக்கப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட நாட்கள் (01.04.2022 அன்று முழு ஆண்டு வங்கிக் கணக்கு முடிவு நீங்கலாக).

ஆ) 2022–ஆம் ஆண்டின் அனைத்து சனிக்கிழமைகளும் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளும்.

[த.பி.பா]

2. மேலே அறிவிக்கையிடப்பட்ட பொது விடுமுறை நாட்கள், மாநில அரசின் அனைத்து பொதுத் துறை நிறுவனங்கள்/ கழகங்கள் / வாரியங்கள் முதலியவற்றுக்கும் பொருந்தும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**வெ. இறையன்பு**

**அரசு தலைமைச் செயலாளர்**

## அறிவிக்கை

மத்திய அரசின் உள்துறை விவகாரங்கள் அமைச்சகத்தின் 08.06.1957 நாளிட்ட பொது-1, 20-25-26-ஆம் எண் அறிவிக்கையின்படி 1881-ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் XXVI/1881) 25-ஆம் பிரிவில் "விளக்கம்" என்பதன் கீழ், பொது விடுமுறை நாட்களாக குறிப்பிடப்பட்ட "ஞாயிற்றுக் கிழமைகளுடன்" பின்வரும் நாட்களும், 2022-ஆம் ஆண்டிற்கான பொது விடுமுறை நாட்களாக கருதப்படும் என தமிழ்நாடு அரசு இதனால் அறிவிக்கிறது.

### இணைப்பு

| வ. எண் | பொது விடுமுறை | தேதி | கிழமை |
|---|---|---|---|
| 1. | ஆங்கிலப் புத்தாண்டு | 01.01.2022 | சனிக்கிழமை |
| 2. | பொங்கல் | 14.01.2022 | வெள்ளிக்கிழமை |
| 3. | திருவள்ளுவர் தினம் | 15.01.2022 | சனிக்கிழமை |
| 4. | உழவர் திருநாள் | 16.01.2022 | ஞாயிற்றுக்கிழமை |
| 5. | தைப்பூசம் | 18.01.2022 | செவ்வாய்க்கிழமை |
| 6. | குடியரசு தினம் | 26.01.2022 | புதன்கிழமை |
| 7. | * வங்கிகள் ஆண்டு கணக்கு முடிவு (வணிக/ கூட்டுறவு வங்கிகள்) | 01.04.2022 | வெள்ளிக்கிழமை |
| 8. | தெலுங்கு வருடப் பிறப்பு | 02.04.2022 | சனிக்கிழமை |
| 9. | தமிழ்ப் புத்தாண்டு / டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் பிறந்த தினம் / மகாவீரர் ஜெயந்தி | 14.04.2022 | வியாழக்கிழமை |
| 10. | புனித வெள்ளி | 15.04.2022 | வெள்ளிக்கிழமை |
| 11. | மே தினம் | 01.05.2022 | ஞாயிற்றுக்கிழமை |
| 12. | ரம்ஜான் (Idu'l Fitr) | 03.05.2022 | செவ்வாய்க்கிழமை |
| 13. | பக்ரீத் (Idul Azha) | 10.07.2022 | ஞாயிற்றுக்கிழமை |
| 14. | மொகரம் | 09.08.2022 | செவ்வாய்க்கிழமை |
| 15. | சுதந்திர தினம் | 15.08.2022 | திங்கட்கிழமை |
| 16. | கிருஷ்ணஜெயந்தி | 19.08.2022 | வெள்ளிக்கிழமை |

[த.பி.பா]

| | | | |
|---|---|---|---|
| 17. | விநாயகர் சதுர்த்தி | 31.08.2022 | புதன்கிழமை |
| 18. | காந்தி ஜெயந்தி | 02.10.2022 | ஞாயிற்றுக்கிழமை |
| 19. | ஆயுத பூஜை | 04.10.2022 | செவ்வாய்க்கிழமை |
| 20. | விஜயதசமி | 05.10.2022 | புதன்கிழமை |
| 21. | மிலாதுன் நபி | 09.10.2022 | ஞாயிற்றுக்கிழமை |
| 22. | தீபாவளி | 24.10.2022 | திங்கட்கிழமை |
| 23. | கிறிஸ்துமஸ் | 25.12.2022 | ஞாயிற்றுக்கிழமை |

* தமிழ்நாட்டிலுள்ள வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

**வெ. இறையன்பு**

**அரசு தலைமைச் செயலாளர்**